அல்லலுறும்
அ க தி மாணவர்களுக்கு
பிரத்தியேக சலுகையுடன்
Aug 90 A/L
கலை,வர்த்தக,விஞ்ஞான
வகுப்புக்கள் யாவும் வழமை
போல் நடைபெறுகின்றன.
நாவலர்
சித்தன்கேணி.

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 2-50

# முரசொலி

முரசு 04 ஒலி 141 புதன் 04-07-1990 (ஆனி 20) துல்ஹஸ்தா 10

அல்லலுறும்
அ க தி மாணவர்களுக்கு
விசேட சலுகையுடன்
G. C. E O/L Dec
வகுப்புகள் யாவும்
வழமைபோல்
நடைபெறுகின்றன.
நாவலர்
சித்தன்கேணி.

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

# கோட்டையில் இராணுவ மீட்பு என்பது அப்பட்டமான பொய்

"ஸ்ரீலங்கா அரசு கோட்டையில் காயம் அடைந்திருந்த இராணுவத்தினரை வெற்றிகரமாக மீட்டுள்ளதாக அப்பட்டமான பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளது. இதில் எந்தவித உண்மையும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது யாழ்.கோட்டையில் காயம் அடைந்த படையினரை அகற்ற நாம் அனுமதி மறுக்கவில்லை யாழ்.கோட்டையில் காயமடைந்த சிங்கள படையினரை அங்கிருந்து அகற்ற நாம் அனுமதி மறுத்து வருவதாக ஸ்ரீலங்கா அரசு பிரசாரம் செய்து வருகிறது. ஆனால் கோட்டையில் காயம் அடைந்தவர்களை அகற்றுவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கதயாராக இருப்பதாகவே கூறிவந்திருக்கிறோம்.

கடந்தவாரம் இதுபற்றி பேசிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடமும் காயமடைந்த இராணுவத்தினரை எடுத்து சென்று வைத்தியம் செய்வதற்கு மனிதாபிமான அடிப்படையில் ஒத்துழைப்பதாக கூறினோம்.

படையினருக்கு வைத்தியம் என்ற பெயரில் கோட்டை முகாமுக்கு ஸ்ரீலங்கா

— 04ஆம் பக்கம் பார்க்க

## ஒரே நாளில்

ராமேஸ்வரத்திற்கு ஒரே நாளில் இலங்கையிலிருந்து 324 அகதிகள் வந்து சேர்ந்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

## பலாலி மோதல்

நேற்று பலாலிமுகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும் மோதல் ஏற்பட்டது இம் மோதலில் இராணுவ வீரர் இருவர் கொல்லப்பட்டனர்

கிளிநொச்சி நகரில் நேற்று

— 04ஆம் பக்கம் பார்க்க

## தம்பலகாமத்தில் கடும் மோதல்

தம்பலகாமத்திலிருந்து முன்னேறி வரமுற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று கடும் மோதல் ஏற்பட்டதாகவும், மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் விடுதலைப்புலிகள் வட்டாரம் தெரிவித்தன. (3)

## மட்டு, திருமலை, வவுனியா மக்களின் தகவல்பெற முயற்சி

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற மாவட்டங்களில் உள்ளவர்களது விபரங்களை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை யாழ் செயலகம் மேற்கொண்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் வசிப்போரினது பெயர், இடம், தொழில், வயது போன்ற விடயங்கள் எழுத்து மூலம் செயலகத்தால் பெறப்படுகின்றது. அத்தியாவசியமாக விபரங்கள் தேவைப்படுவோருக்கு மட்டுமே முதலில் தகவல்பெற முயற்சிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது

வெளி மாவட்டங்களில் உள்ளோர்களது விபரங்களை பெற்றுத் தரும்படி பலர் யாழ் செயலகத்தைக் கேட்ட காரணத்தினாலே மேற்படி முயற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## டெலோ கோரிக்கை

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எத்தகைய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தொடர்ந்து நிகழ்ந்து வரும் இனப்படுகொலையைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று டெலோ சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார், (04)

## ★ நள்ளிரவுச்செய்தி

### அரசின் இறுக்கம் தளர்ந்து.....

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உக்கிரச்சமர்நிலையின் எதிரொலியாகஅரசு தன் இறுக்கநிலையைத் தளர்த்தி சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முயற்சி மேற்கொண்டதாகவும் இந்த வகையில் ஜனாதிபதி தனது மிக, மிக நெருங்கிய 'சர்வதேச ரீதியில்' அவரது குரலைப் பிரதிபலிக்கக் கூடிய ஒருவரை யாழ்ப்பாணத்திற்கு இன்று அனுப்பி வைக்க பிரயத்தனம் செய்ததாகவும் எனினும் இம் முயற்சி பலிதமாகும் நிலை உருவாகவில்லை என்றும் நேற்று நள்ளிரவு கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

ஸ்ரீ

## லொறிச் சாரதி தாக்கப்பட்டார்

இராணுவ கெடுபிடிகளின் மத்தியில் கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றி வந்த லொறி ஒன்று யாழ் நகரை நேற்று வந்தடைந்தது.

இந்த லொறிச் சாரதியும் உதவியாளரும் அனுராதபுரம், மதவாச்சி, வவுனியா போன்ற இராணுவ முகாம்களில் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். (04)

## தமிழக முதல்வர் மீண்டும் வேதனை வெளிப்பாடு

# ஏதுமறியாத் தமிழர் எண்ணற்றோர் படுகொலை செய்யப்படுகின்றனரே



ஏதுமறியா அப்பாவித் தமிழர்கள் எண்ணற்றோர் தமிழ்ப்பகுதிகளில்படுகொலை செய்யப்படுகிறார்கள். இந்நிலை மிகுந்த மனவேதனையைத் தருகிறது'' என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி மீண்டும் இலங்கை நிலைபற்றி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்

''தமிழர் வேதனைக்கு முடிவுகட்ட மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து தொடர்ந்து முயற்கிகள் மேற்கொள்ளும்'' என்று கலைஞர் சொன்னார்.

சென்னையில் இலங்கை நிலைபற்றி தனதுநிலைப்பாடு பற்றி அவர் மேற்கண்டவாறு விபரித்தார்.

இது இவ்வாறு இருக்க இலங்கைத் தமிழர் பாதுகாப்புபற்றி 3 வது நாடுகள் தலையிடும் சாத்தியக்கூறுகள் குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையை இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பெர்னாட் திலகரத்னவுடனான பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்ததாகப் புதுடில்லி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு, இந்திரகுமார், குஜ்ராலுக்கும், திரு. திலகரத்னவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

ஸ்ரீலங்கா அரசு படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போரினால் இந்தியாவுக்கு அகதிகள் பெருமளவில் வரக்கூடிய நிலைபற்றி திரு. குஜ்ரால் திரு. திலகரத்னவிடம் சுட்டிக் காட்டியதாகவும் தெ[illegible]விக்கப்ப[illegible]

ஸ்ரீ

# சகல பாடசாலை அதிபர்களுக்கும் நிலுவையுடன் சம்பள அதிகரிப்பு

சகல பாடசாலை அதிபர்களுக்கும் சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப்புதிய சம்பள அதிகரிப்பு 1988-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர்களின் தரங்களுக்கு ஏற்ப புதிய சம்பள அதிகரிப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதின்படி முதலாம் தர அதிபர்களுக்கு 33,000 ரூபாவும், இரண்டாம்தர அதிபர்களுக்கு 31,200 ரூபாவும், மூன்றாம்தர அதிபர்களுக்கு 27,000 ரூபாவும் வருடாந்த சம்பளமாக வழங்கப்படும்.

1988-ம் ஆண்டு முதலான அதிகரித்த சம்பள நிலுவையை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பதில் அதிபர்களாகக் கடமை புரிந்து வருவோருக்கு நிரந்தர அதிபர் பதவிகளை வழங்குவதற்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் ஏற்கனவே நடைபெற்ற அதிபர் தர பதவியுயர்வுப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் மேலும் பல அதிபர்களுக்கு நிரந்தர அதிபர் பதவிகள் வழங்கப்படவுள்ளன. (கி)

## மக்கள் இடருறும் வேளை

# ஆடுகள், கோழிகள் மீது இவர்களது கண்

காங்கேசன்துறைப் பகுதியில் திருட்டுக்கள் அதிகமாக இடம் பெறுகின்றன. இப்பகுதியில் சனநடமாட்டமில்லாது இருப்பது திருடர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. வீடுகள் உடைக்கப்பட்டு திருடப்படுவதோடு மக்களால் கைவிடப்பட்ட ஆடுகள் கோழிகள் என்பனவும் திருடப்படுகின்றன.

அண்மையில் தையிட்டியில் சங்கக்கடை முகாமையாளர் ஒருவரதும் அவரது சகோதரனது வீட்டிலும் திருடிய மூவர் மக்களால் வழிமறிக்கப்பட்ட வேளை இருவர் தப்பியோட ஒருவர் அகப்பட்டுக் கொண்டார். களவாடப்பட்ட பெறுமதி மிக்கப் பொருட்களுடன் அவர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார், 10ஸ்ரீ

# தீக்குண்டு பொழிந்து தமிழர் உயிர் பறிப்பு

வடக்கு கிழக்கில் அப்பாவித் தமிழர்களை ஸ்ரீலங்கா அரசபடை தீக்குண்டுகளை வானில் இருந்து ஏவிப் படுகொலை செய்து வருகிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளதாக நேற்று இந்திய வெகுசனத்தொடர்புசாதனங்கள் தெரிவித்தன.

இத் தீக்குண்டு பொழிவு மூலம் பல தமிழர் உயிர் பறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

# தெல்லிப்பழை முன்மாதிரி

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் தனது ஊழியர்களுக்கு 150 ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களை நிவாரணமாக வழங்கியுள்ளது, (48-கி)

பழந் தமிழர் வீரக் கோலங்கள்

கோலம் : 3

## சென்று வா மகனே; செருமுனை நோக்கி!

> ''மான்குட்டி போல் இருக்கின்றேன், அதனாலே மாற்றார் எனும் புலிப்போத்தின் வாய்க்குள்ளே இரையாக மாறிப்போவேன் என்று இரங்கலுரை இப்போதே ஆற்றுகின்றீர், அச்சம் தவிர்த்திடுக அய்யனே! இறந்த பின்னர் எச்சமெனத் தமிழன் விட்டுச் செல்வது மானமொன்றே!''

கலகலவெனக் காலில் ஒலித்த
சதங்கையைக் கழற்றி; வீரக்
கழலினை அணிந்த இளங்கன்று அவன்!
பின்னிச் சடையிட்ட நீள்குடுமி களைந்து
மின்னிடும் வாளேந்தி நிற்கின்ற சிறுவன் அவன்!
மெல்லிய கரங்களில் எழில் வளையல் நீக்கி
வில்லினைத் தோளில் தாங்கிய இளைஞன் அவன்!
ஐம்படைத் தாலியினை இன்னும் மார்பில் பூண்ட
அறியாப் பருவத்தினன் அவன்!

பாண்டிய மரபில் வந்த அந்தப் பாலகனோ
பலமுண்டு பகையழிக்கத் தன் தோளுக்கென்று
படை நடத்தத் தலைமை ஏற்றான்;
பார் அதிர முரசொலித்தான்!
கடும் எதிர்ப்பின் தலை மிதிக்கப் புறப்பட்டுக்
களம் சென்று வெல்வேன் என்று சூளுரைத்தான்!
நெடுஞ்செழியன் என்கின்ற பெயருடையான்;
நிமிர்ந்த தலை வளையாத புகழுடையான்!

வயதில் இளையோன் பாண்டியன் என்று,
வலியோர் ஐந்து வேளிர் துணையுடன்;
சேர சோழ முடிமன்னர் இருவர்,
போரில் குதித்து ஓலை அனுப்பினர்!
வேளிர் வேந்தர் ஐவர் படையும்
வில், புலி பொறித்த கொடியுடை மன்னர்
இருவர் படையும் இணைந்து மோதிட;
எழுவரை எதிர்க்க இயலுமோ என்று
இளைஞன் பாண்டியன் கலங்கவே இல்லை!

''ஒடுங்கி அடங்கிடுக! அல்லால்; உயிர்
ஒழிந்து போக நேரிடும்!'' என்ற
ஓலை கண்டு உரக்கச் சிரித்தான்!
ஒளிந்திடும் மரபல்ல போருக்கென்றான்!

''இளவயது எனக்கென்று ஏளனம் புரிகின்றார்
எதிர்ப்போர் வயதும் படையும் என் முன்னே
எப்பாடு படப் போகின்றதென்று
இக்கணமே தெரிவிக்கின்றேன்!
ஓலை கொண்டு வந்தவனே! உடன்
ஓடு நீ; உன் ஏழு மன்னரிடம்! வீர
வேலை, கரம் ஏந்திவிட்டான்; ......
........................ ''

(நாளை தொடர்கிறது)

'சங்கத் தமிழ்' நூலிலிருந்து - கலைஞர் கருணாநிதி அவர்கட்கு நன்றியுடன்.
தேர்வு : 'கங்கா'

## நெருக்கடி இந்தியாவை

# எதிர் நோக்குகிறதுஎனினும் ஜெயமே என்கிறார்ஜெனரல்

''இந்தியா நெருக்கடியான நிலையை எதிர் நோக்கியுள்ளது'' என்று இந்தியாவின் புதிய இராணுவத் தளபதி ஜெனரல் றொட்றிக்கோ தெரிவித்தார்.

''எனினும் இந் நெருக்கடியை எதிர் கொள்ளும் நிலையில் இந்தியா உள்ளது. நிலைமையைச் சமாளித்து வெற்றி கொள்வோம்'' என்றும் அவர் நேற்றுத் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில்

# மருத்துவ சேவை மகத்துவம் உணராத இழி நிலை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி கடமைக்கு சமுகம் அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி வைத்திய அதிகாரியான எம். குணரட்னம் சந்திரசேகரம் சண்முகராசன் ஆகியோர் தமது கடமையை உருத்திரபுரம்முரசுமோட்டை வட்டக்கச்சி ஆகியஇடங்களில் பொறுப்பாகக் கவனித்து வருகின்றனர்.

இராணுவ விமானத்தாக்குதலாலும் ஷெல்தாக்குதலாலும் பாதிப்புக்குள்ளான நோயாளர்களை கவனிப்பதற்கு போதியளவு தாதியர்களும் வைத்தியர்களும்இல்லாததால் மக்கள் மிகவும் துன்பப்படுகின்றனர்.

எனவே மேற்படி வைத்தியசாலையில் வேலை செய்யும் ஊழியர்கள் தங்கள் கடமையை செய்ய முன்வருமாறு மக்களும் பொது ஸ்தாபனத்தினரும் கோருகின்றனர்.

(ப. 6- ஸ்ரீ)

# இவர்களுக்கு இக்கதி!

வெளிநாடு ஒன்றிலிருந்து கொழும்பு வந்த மூன்று தமிழ் இளைஞர்கள் யாழ். வரும் வழியில் அநுராதபுரத்தில் சிங்களக் காடையர்களினால் வெட்டிச் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கொழும்பில் இருந்து தனியார் பஸ் ஒன்றில் வந்த இவர்கள் அநுராதபுரம் பழைய நகர்ப் பகுதியில் இறங்கினர் என்றும் அங்கிருந்து இவர்கள் புதிய நகர்ப் பகுதிக்கு தமது உடமைகளுடன் வந்துகொண்டிருந்ததாகவும் அப்போது இவர்கள் தமிழில் பேசிக்கொண்டு வந்ததாகவும் இதனை அவதானித்த சில சிங்கள காடையர்கள் இவர்களைப் பிடித்து சூட்கேஸ், கைக்கடிகாரம் தங்கச் சங்கிலி என்பவற்றைப் பறித்துக் கொண்டதாகவும் அறிய வருகிறது.

இம் மூன்று தமிழ் இளைஞர்களையும் வெட்டிக் கொன்ற காடையர்கள் அவர்களது சடலங்களையும் ரயர் போட்டுத் தீயிட்டு கொளுத்தினர் என்றும் பின்னர் தகவல் வெளியாகியுள்ளது, ஸ்ரீ

# 'ஓ' குறூப் இரத்தம் தேவை

(உடுப்பிட்டி)

திருமலையில் இராணுவத் தாக்குதலால் பாதிப்புற்ற பெண் ஒருவருக்கு உடனடியாக 'ஓ'·(0) நெகற்றிவ் ரத்தம் தேவைப்படுகின்றது.

இரத்தப்போக்கு ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கும் திருமதி சுப்பிரமணி செந்தில்- மணி (வயது 32) என்பவருக்கே உடனடியாக ஓ நெகற்றிவ் இரத்தம் தேவையாக உள்ளது.

இவருக்கு உதவி செய்ய விரும்பும் பொதுமக்கள் வடமராட்சியில் எந்த ஒரு வைத்தியசாலையிலும் ரத்ததானம் செய்யலாம் என்றும் அகதிகள் பராமரிப்புச்சபை கேட்டுள்ளது. (39 கி)

# பாலைதீவு கடலில் பீரங்கிப் படகு

பாலைதீவுக்குக் கிழக்கே ஸ்ரீலங்கா கடற்படைப் பீரங்கிப் படகொன்று கடந்த வெள்ளிக்கிழமை முதல் நிலைகொண்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைக் கண்ட மீனவ மக்கள் பீதியுடன் தொழில் செய்யாமல் திரும்பியுள்ளனர். குருநகர்,பாஷையூர், கொழும்புத்துறை, துண்டிப்பகுதி மக்கள் இதனால் பீதியடைந்துள்ளனர். (கி)

# பனங்கட்டி மீண்டும் பாவனை

மீண்டும் யாழ்ப்பாணத்தில் பனங்கட்டி பாவனைக்கு வந்துள்ளது.

தற்போது யாழ் குடாநாட்டில் நிலவும் சீனித் தட்டுப்பாடு காரணமாகக் கற்பக தருவின் கருப்ப நீரில் இருந்து தயாரிக்கும் பனங்கட்டிக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டு வருகின்றது.

பல பாகங்களிலும் தற்போது பனங்கட்டி பாவிக்கப்பட்டுவருகின்றது. (39 கி)

# காரைநகரில்

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இத்தாக்குதல்களில் ஒருவர் பலியானதாகத் தெரியவருகிறது.

# கடற்படைமுகாம் தாக்குதலில்

வடபகுதியில் காங்கேசன் துறைப் பகுதியில் உள்ள கடற்படையினரையும் காரைநகர் கடற்படை முகாமையும் விடுதலைப் புலிகள் இடைவிடாது தாக்கி வருவதாகக் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவைக் கந்தன் மகோற்சவம்

(கீரிமலை)

மாவைக்கந்தன் ஆலய மகோற்சவம் கடந்த புதன் கிழமை 27-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மாவிட்டபுரம் சுற்றாடலில் மக்கள் இடம்பெயர்ந்துள்ள போதும் கோயிலில் பக்தர் கூட்டம் காணப்படுகிறது.

இம்முறை திருவிழாவை முன்னிட்டு விசேட கடைகள் எதுவும் திறக்கப்படாத போதும் உற்சவ நேரங்களில் அடியார்கூட்டத்தைக் காணக்கூடியதாக உள்ளது. (48-கி)

# சுகாதார நிலைமை மோசம் உதவி செய்ய எவருமேயில்லை

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்கில் பல அகதி முகாம்களில் சுகாதார நிலைமை மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல முகாம்களில் அகதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலேயே இந் நிலமை ஏற்படுவதாகத் தெரிய வருகின்றது.

யாழ். மாவட்டத்திலேயே வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலேயே அகதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது குறிப்பிடத் தக்கது.

இருந்தும் எந்த ஒரு தொண்டர் ஸ்தாபனமும் இவர்களுக்கான வசதிகளை இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று இடம்பெயர்ந்து வந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை நகர்ப்புறங்களிலேயே கூடிய கவனம் செலுத்தி வருவதாக மக்கள் குறைப் பட்டுக்கொண்டனர். (43 கி)

# ரஞ்சனின் சூளுரை இது

'ஜே. வி பி. இயக்கத்தினரை தெற்கில் அழித்தது போல் புலிகளையும் ஒழித்தே தீருவோம்' என சூளுரைத் திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா.

இவர் கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருது, கல்முனை, மட்டக்களப்பு, சம்மாந்துறை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தார், சாய்ந்த மருதுவில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத்தெரிவித்தார்.

அமைச்சருடன் டெலோ பாராளுமன்ற உறுப்பினர் திவ்வியநாதன், கருணாகரன் மற்றும் ஈ. பி. ஆர். எல். எப். மாகாணசபை அமைச்சர் அபூயூசுப், புளட் சித்தார்த்தன், மோகன் ஆகியோரும் கிழக்குப்பிராந்திய இராணுவ கொமாண்டர் டென்சில் கொப்பேகடுவவும் அமைச்சருடன் கூடச்சென்றிருந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

## க. பொ. த. பரீட்சைக்கு

# உடற்பயிற்சிக் கல்வி இனி கட்டாய பாடமாகும்

கல்விப் பொதுத்தரா தரப் பத்திர சாதாரணதர, உயர்தர வகுப்புக்களில் உடற்பயிற்சிக் கல்வி ஒரு பாடமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

அடுத்த வருடம் முதல் இத் திட்டம் நடைமுறைப் படுத் தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உடற்பயிற்சிக் கல்வியைபட்டப் படிப்புக்கு ஒரு பாடமாக சேர்த்துக்கொள்வது பற்றியும் தற்பொழுது ஆராயப்பட்டு வருகின்றது.

அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சைகளின் போது விளையாட்டுத்திறமைகளையும் கருத்திற் கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதுதவிர விளையாட்டு வீரர்களை காப்புறுதி செய்ய புதிய திட்டமொன்றும் அறிவிக்கப்படவுள்ளது. (கி

## தென்மராட்சிப் பகுதியில்

# சகல பாடசாலைகளையும் இயங்க வைக்க முயற்சி

தென்மராட்சிப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளையும் இயங்க வைக்க தென்மராட்சி உதவி கல்விப்பணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மாணவர்களின் கல்வித் தரம் குறைவடையாமல் இருக்க சகல பெற்றோர்களும் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புமாறும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கூடுதலான அளவு அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் பாடசாலைகளை நடாத்துவதில் சிரமமிருக்காது என திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் தங்கியிருக்கும் சில பாடசாலைகள்கூட சிறப்பாக இயங்குவதால் ஏனைய பாடசாலைகளையும் இயக்குவதில் எந்தக் கஷ்டமும் இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ப-3-கி)

# 'அகதிகளா'கக் கருதப்படாத அகதிகள் இவர்கள்

திருமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலிருந்து அகதிகளாக ஊர் திரும்பியுள்ள வடபகுதியைச் சேர்ந்த அரச ஊழியர்கள் அகதிகளாகக் கருதப் படாத நிலையில் நிவாரணம் எதுவும் பெற முடியாது நிர்க்கதியான நிலையில் அவதியுறுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பிரஸ்தாப ஊழியர்கள் தாம் கடமை புரிந்த திருமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் குடும்பங்களுடன் வசித்து வந்தனர். இராணுவத் தாக்குதல்களால் உடமைகளையும், பொருட்களையும் இழந்து இவ்வூழியர்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வடபகுதி வந்து சேர்ந்துள்ளனர்.

எனினும் இவ்வூழியர்கள் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்பியுள்ளதினால் இவர்களை அகதிகளாக ஏற்கமறுப்புத் தெரிவிக்கப்படுவதாகப் பாதிக்கப்பட்டவெளிமாவட்ட அரச ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (36 கி)

## திருமலையிலிருந்து தப்பிவந்தவரின் அனுபவம்

# 'இராணுவத்திடம் தப்ப ஓடிவந்த எம்மை மதயானையும் கூடவே சேர்ந்து துரத்தியது'

திருமலையிலிருந்து கால் நடையாக களைப்புடன் முல்லைத்தீவை நோக்கி வந்து கொண்டிருந்த எம்மை இடையில் காட்டுப்பாதையில் எதிர் கொண்ட மதயானையொன்று துரத்தத் தொடங்கியது பலம் உள்ளவரை ஓடி சிறுகாயங்களுடன் அந்த மத யானையிடமிருந்து நாம் ஒருவாறு மயிரிழையில் தப்பிக் கொண்டோம்.

இவ்வாறு தனது பயங்கர அனுபவத்தை நடராஜா சிறிதரன் என்பவர் நேற்று முரசொலிக்குத் தெரிவித்தார். இவரும் இவருடன் வந்த ஏனையோரும் தற்பொழுது ஈச்சமோட்டையில் தங்கியுள்ளனர்.

அவர் தனது பயங்கர அனுபவத்தை விபரிக்கையில்:-

'கடந்தமாதம் பதின்மூன்றாம் திகதி திருகோணமலையிலிருந்து புறப்பட்டு இருபத்தொன்பதாந்தேதி நாம் யாழ்ப்பாணம் வந்தடைந்தோம். திருகோணமலையில் இனக்கலவரம் எந்நேரமும் ஏற்படலாம் என்ற சூழ்நிலை நிலவியதினால் நான் எனது குடும்பத்துடன் புறப்பட்டு பதின்மூன்றாந்தேதி இரவு நிலாவெளியிலுள்ள பாடசாலை ஒன்றில் தங்கினோம். அங்கு திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்த பல குடும்பங்களும் சென்று தங்கியிருந்தன.

பதினேழாந்தேதி இரவு ஒரு மணியளவில் கன்னியா வீதியில் அமைந்த வில்கம் விகாரையில் இருந்து இலங்கைப்படையினரால் ஏவப்பட்ட ஷெல் வந்து நாங்கள் தங்கியிருந்த பாடசாலைக்கருகில் செல்வம் என்பவரின் மில்லில் விழுந்தது. அதனால் அங்கு தங்கியிருந்த அகதிகள் முப்பத்தைந்துபேர் இறந்ததுடன் இருபத்தைந்துபேர் படுகாயமடைந்தனர்.

இதனால் பீதிகொண்ட நாம் அங்கிருந்து இடம் பெயர்ந்து இறக்கக் கண்டியில் உள்ள முஸ்லிம் பாடசாலையில் தங்கினோம். ஒரு சிலர் கும்புறுப்பிட்டியில் உள்ள அரசாங்கத் தமிழ்ப் பாடசாலையில் தங்கினார்கள். பதினெட்டாந்தேதி ஹெலித்தாக்குதலினால் எம்முடன் இருந்தவர்களில் பத்துப்பேர் படுகாயமடைந்தனர். தெய்வாதீனமாக எனது சிறுகுழந்தை(வயது 2) காலில் சிறு உரசல் காயத்துடன் தப்பிக்கொண்டது. அத்துடன் இன்னும் சிலர் சிறு காயங்களுக்குள்ளானார்கள். படுகாயமடைந்த பத்துப் பேரையும் உடனடியாக ஸ்தலத்திற்கு வந்த போராளிகள் தமது வாகனத்தில் எடுத்துச் சென்று நிலாவெளி மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால் அவர்களில் எத்தனைபேர் உயிர்தப்பினார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

இதனால்பதினெட்டாந்தேதி இரவு கால்நடையாககம்பத்தை என்ற கிராமத்தையடைந்து அங்குள்ள பாடசாலையில் ஓய்வு எடுத்தபின் திரியாய் என்ற கிராமத்தை வந்தடைந்தோம்.

செல்லும் வழியில் ஊர் காவற் படையினர் எம்மை சந்தித்தனர். நாங்கள் எண்ணிக்கையில் அதிகமாய் இருந்ததினால் அவர்கள் எங்களுக்கு எதுவும் செய்யவில்லை. ஆனால் அவர்கள் சற்றுத் தொலைவில்அரண் அமைத்து நிலைகொண்டிருந்த இராணுவத்தினரிடம் எங்களைப்பற்றித் தகவல் கொடுக்கத்தவறவில்லை. அதன்பயனாக இராணுவத்தினர் நாங்கள் சென்று கொண்டிருந்த திசையை நோக்கி ஷெல்மாரி பொழிந்து சுடவும் ஆரம்பித்தனர். ஷெல் அடிபட்டு இரண்டுபேர் உயிர் துறந்தனர். பலர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பிக்கொண்டனர்.

அதன்பின் கொக்குத் தொடுவாயை வந்தடைந்து யாழ்ப்பாணத்தை வந்து சேர்ந்தோம்' என்று தெரிவித்தார். (16-கி)

# யாழ். மக்கள் வங்கி அலுவலகம் நாளை முதல் இயங்கும்

யாழ்ப்பாணம் மக்கள்வங்கி பிரதேச காரியாலயம் பிரதான வீதிக்கிளை ஆகியகட்டிடங்கள் சேதமுற்ற காரணத்தால் அவையாவும் தற்காலிகமாக யாழ் - ஸ்ரான்லி வீதிக்கிளையில் இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

மேற்படி வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்கள் நாளை வியாழக்கிழமை யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளையில் சமுகம் அளிக்கும்படி வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

கன்னாதிட்டி கிளையில்கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் அதேகிளையில் வியாழக்கிழமை கடமைக்குச் சமுகம் அளிக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது,

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயம் உட்பட வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் வேலைக்குத் திரும்பமுடியாது இருப்பின் உடனடியாகஸ்ரான்லி வீதிக் கிளையில் சமுகம் தந்து பிரதேச முகாமையாளரைச் சந்திக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# யாழ். மாநகர குடிநீர் விநியோகம் பாதிப்பு

பிரதான நீர்ப்பாசனக் குழாய் ஒன்று பலமாகச் சிதைவடைந்துள்ளதால், யாழ். நகர்ப்பகுதிகளுக்கான நீர் விநியோகம் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

கடந்த 29-ம் திகதி இடம் பெற்ற விமானத் தாக்குதலால், இக்குழாய் பலமாகச் சிதைவுபட்டுள்ளது.

இந்தக் குழாயை சீர் செய்வதற்கு, இப்பகுதியில் அடிக்கடி விமானத் தாக்குதல் இடம்பெறுவதால், முடியாது உள்ளதாகவும், மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (4 கி)

# 'ஓன எக்கட்ட காண்ட பேன்ன எக்கட்ட காண்ட'

'ஓன எக்கட்ட காண்ட, பேன்ன எக்கட்ட காண்ட' சில தினங்களுக்கு முன்னர் யாழ். நகரின்மீது பொம்மர்கள் கூட்டாகத் தாக்குதல் மேற்கொண்டிருந்த வேளை எப். எம். அலைவரிசையில் இந்த வார்த்தையையும் செவிமடுக்க முடிந்தது.

இதன் தமிழ் மொழிபெயர்ப்பு 'வேண்டிய ஒன்றை தெரிகிற ஒன்றைத் தாக்கு'. (கி)

# கீரிமலை மீண்டும் சோபையிழப்பு

(கீரிமலை)

கடற்படைப்படகுகளியிருந்து கீரிமலைப் பகுதியை நோக்கி தினமும் பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுவருவதால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

முன்பு தினமும் பல்லாயிரக் கணக்கான யாத்திரீகர்களும் உல்லாசப்பயணிகளும் வந்து சென்ற கீரிமலை தற்போது மயான பூமியாக காட்சியளிக்கிறது.

ஆலயங்களில் பூசைகள் மட்டும் நடைபெற்று வருகின்றன.

ஷெல்தாக்குதலினால் இப்பகுதிக்கான மின்சாரமும் தடைப்பட்டுள்ளது. (48கி)

# மக்கா சன நெரிசலில் ஆயிரக்கணக்கானோர் பலி

புனித மக்காவில் சுரங்கப் பாதையில் இடம்பெற்ற சன நெரிசலில் ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர்.

1000 பேர் செல்லக்கூடிய 20 மீற்றர் அகலமுள்ள இச் சுரங்கப்பாதை வழியே 5000 பேர் ஏககாலத்தில் போக முற்பட்ட போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பிராணவாயுபற்றாக்குறை, கடும் வெப்பம் காரணமாகவே இந்த மரணங்கள் ஏ[...] பட்டதாகவும் அறிவிக்கப்[...] கின்றது.

இறந்தவர்களில் அனேகம[...] னோர் இந்தோனேஷியா[...] மலேசியா, துருக்கி ஆகி[...] நாடுகளைச் சேர்ந்த யாத்[...] ரிகர்களாவர்.

இந்த விபத்தில் இற[...] தோர், காயமடைந்தோர் ப[...] றிய முழுமையான விபரங்க[...] எதுவும் இதுவரை அறிவி[...] கப்பட வில்லை. (கி)

# மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டனர்

கொழும்பிலிருந்து மட்டக் களப்பிற்கு கடந்த சனிக் கிழமை 500 பேர் பஸ்களில் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் கொழும்பிற்கு அலுவலாகச் சென்று அங்கு சிக்கிக் கொண்டவர்களாவர். கி

# பருத்தித்துறையில் கடைக்குச் சீல்

பருத்தித்துறையில் பிரபல நிறுவனம் ஒன்று பொருட்களை வைத்துக்கொண்டு விற்க மறுத்ததை அடுத்து மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது. கடையில் இருந்த பொருட்கள் வெளியே எடுக்கப்பட்டு காத்து நின்றவர்களுக்கு பங்கீட்டு முறையில் விநியோகிக் கப்பட்ட[...]

# இந்திய இராணுவத்துக்கு புதிய தளபதி

இந்திய இராணுவத்தின் புதி[...] பதின்னான்காவது தளப[...] யாக ஜெனரல் பிரான்சி[...] ரொட்றிக்கஸ் கடந்[...] ஞாயிற்றுக்கிழமை பத[...] ஏற்றுக்கொண்டார் இப்[...] வியை [...] மூன்றாள்[...]

MURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRILANKA 04-07-1990 புதன்கிழமை

## இம்மாதத்திற்குரிய ஒய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்க ஏற்பாடு

இம் மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை யாழ் செயலகம் மேற்கொண்டுள்ளது.

கொழும்பில் இருந்து ஓய்வூதிய வவுச்சர்கள் பெறமுடியாவிட்டாலும் மாற்று நடவடிக்கைகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான நிதியைப் பெறும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மாதம் 12ம் திகதியே ஓய்வூதியம் வழங்க குறிக்கப்பட்ட திகதியாகும். இத்திகதியில் ஓய்வூதியக்காரருக்கு ஓய்வூதியம் கிடைக்குமென தெரிவிக்கப்பட்டது. (3)

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பொறுப்பற்ற தாக்குதல் நடவடிக்கைக்கு எதிர்ப்பு

''வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டு வரும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள், குண்டுத் தாக்குதல்கள் போன்ற வன்செயல்களின் மூலம், அப்பாவித் தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும் உயிரிழப்புக்காகவும், உடமை இழப்புகளுக்காகவும் எமது ஆழ்ந்த மனவேதனையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.''

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று நடாத்திய அவசரப் பொதுக்கூட்டத்தின் பின் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

''தமிழ்ப் பிரதேசங்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கு தலை நிறுத்தியமைக்கும்; இப்பிரதேசங்களுக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும்இடையிலான தொலைதூரத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டமைக்கும் எமது ஒரு முகமான அதிருப்தியையும், வருத்தத்தையும் தெரிவிக்கின்றோம்.''

''இவ்விதமான துயரங்களினாற் பாதிக்கப்பட்டவர்களும் இடம்பெயர்ந்து வந்தவர்களுமான எல்லா மக்களுக்கும் உதவுவதற்காக, யாழ்-பல்கலைக்கழக ஆசிரியர்களும், ஆசிரியைகளும் தத்தமது ஒவ்வொரு மாதச் சம்பளத்திலிருந்து ஆகக் குறைந்தது 5 வீதமான பணத்தை வழங்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.'' என்பதாகும். (6-ஸ்ரீ)

## 15 உணவுப் பொதிகளில் 2 மட்டும் கோட்டைக்குள்

நேற்றுமாலை பதினைந்து உணவுப் பொதிகள் விமானம் மூலம் யாழ் கோட்டை இராணுவ முகாமுக்கு போடப்பட்டன.

இவற்றில் இரண்டு பொதிகள் மட்டுமே கோட்டை முகாமின் உட்புறத்தில் விழுந்தன மிகுதிப் பொதிகள் யாவும் கோட்டையின் அகழிப்பகுதியிலும் கடற்கரைப் பகுதியிலும், சுற்றுவெளியிலும் விழுந்தன.

3.30 மணியளவில் வந்த அவ்ரோஇன விமானமேஇந்த பொதிகளை கோட்டைக்குள் போட்டது இதற்கு உதவியாக பொம்மர் விமானம் ஒன்றும் வட்டமிட்டது பலதடவைகள் கோட்டையை சுற்றி வந்த அவ்ரோவிமானம் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு பொதிகளை முகாமுக்குள் போட்டது இதை பொது மக்கள் பயமின்றி பார்த்து நின்றனர். 03

## சர்வதேச உதவி நிறுவனங்கள் அகதிகளுக்கு நேரடியாக உதவுக!

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் காயங்களினாலும் நோயினாலும், பட்டினியாலும், சாவை எதிர்நோக்கியுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு உதவி வழங்க முன்வரும் அமைப்புகளோ, நாடுகளோ அவற்றை பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகவே வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஸ்ரீலங்கா இராணுவத்தாலும் சிங்கள குண்டர்களாலும், இதுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் வீடு, சொத்துக்களை இழந்து 5 லட்சத்திற்கு அதிகமான மக்கள் உண்ண உணவின்றி மருத்துவ வசதி இன்றி அகதிகளாக அவதியுற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் அனைத்து உதவிகளையும் வழங்கி வருவதாக கூறி வரும் ஸ்ரீலங்கா அரசு யுத்தம் தொடங்கியபின் உணவு, மருந்து எரிபொருள் உட்பட எந்த பொருள்களையும் அனுப்பிவைக்காதது மட்டுமல்ல தனியார்களும் எந்த பொருட்களையும் எடுத்து வர விடாது தடுத்துவருகிறது.

உலக நாடுகளோ, மனித நல அமைப்புகளோ, சுகாதார நிறுவனங்களோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென உதவிகளை ஸ்ரீலங்கா அரசு ஊடாக வழங்கினால் அந்த உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை. மக்களை பாதிப்புக்குட்படுத்தி வரும் சக்திகளுக்கே அவ் உதவிகள் போய் சேர்ந்துவிடும்.

இவ்வாறு விடுதலை புலிகள் மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. ர

## இன்று

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர் தினம் இன்று நடைபெறும் (80)

# மூன்று லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர்

யாழ் மாவட்டத்தில் மூன்று லட்சத்திற்குமதிகமான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அகதிமுகாம்களில் மட்டும் இரண்டு லட்சத்திற்குமதிகமானமக்கள் தங்கியுள்ளார்கள் இறுதிக்கணக்கொடுப்பின்படி 314 அகதிமுகாம்களில் 42,832 குடும்பங்கள் தங்கியுள்ளன. வெளிமாவட்ங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்த ஏழாயிரம் குடும்பங்களும் இதனுள் அடங்குகின்றார்கள்.

வெளிமாவட்டத்தில் இருந்து வந்த பல ஆயிரம் அகதிகள் தனிப்பட்டவர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளார்கள். இவர்களது பதிவுகள் பதியப்படாமல் உள்ளன.

அத்துடன் யாழ் மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்துள்ளார்யதார்த்தமாகப்பார்க்கையில் 3லட்சத்திற்குமதிகமான மக்கள் யாழ் மாவட்டத்தில் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். 03

## ஜனாதிபதி விதிக்கும் நிபந்தனை ஆயுதங்களை கீழே வைத்தால் சமாதானப்பேச்சுத் தொடரும்

''சமாதானப்பேச்சு வார்த்தைகளை நாம் கைவிடவில்லை ஆனால் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முன்பாக விடுதலைப்புலிகள் தம் வசமுள்ள ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும்' என்று ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸ நேற்று அறிவித்தார்.

''விடுதலைப்புலிகளுடன் இதய சுத்தியுடன் தான் பேச்சு வார்த்தைகளை நடத்தினோம் ஆனால் சிலர் இது பற்றி எம்மை விழிப்புடனிருக்குமாறு எச்சரித்திருந்தனர்'' என்றும் அவர் சொன்னார்.

இது இவ்வாறு இருக்க, அரசு வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை கருதி உருவாக்கியுள்ள தேசிய பாதுகாப்பு நிதிக்கு நாளாந்தம் பல இலட்சக்கணக்கான பணம் குவிந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் சார்பில் இந்நிதிக்குப் பெருமளவு நேற்று அரசிடம் கையளிக்கப்பட்டதாகவும் அரசுதெரிவித்தது

இதற்கிடையில் இந்தியத் தலைவர்களுடனான பேச்சு வார்தைகளின் போது தாம் நடத்திவரும் போர் நடவடிக்கை தமிழர்க்கு எதிரானதல்ல தீவிரவாதிகளுக்கு எதிரானதே என அரசு கூறியதாக இந்திய வெகு ஜனத்தெடர்பு சாதனங்கள் தெரிவித்தன(ஸ்ரீ

## சாவகச்சேரியில் நேற்று பொம்மர் சுற்றிச்சுழன்றது மக்கள் பதைபதைத்தனர்

நேற்று அதிகாலை சாவகச்சேரிப் பகுதியில் பொம்மர்கள் சுற்றிச் சுழன்றதால் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பும் பீதியும் ஏற்பட்டது.

பலர் பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்.

அசம்பாவிதம் ஏதும் நிகழலாம் என்ற அச்சத்தால் நேற்று வழமையாகக் கூடும் சந்தையில் கூட மக்கள் தொகை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

## இந்தியத் தலைவர்களுடனான பேச்சுக்கள் மனநிறைவைத் தந்தது என்கிறார் திலகரத்ன

தான் இந்தியத் தலைவர்களுடன் நடாத்திய பேச்சு வார்த்தைகள் தனக்கு மனநிறைவைத் தந்துள்ளதாக இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பெர்னாட் திலகரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ரால் மற்றும் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. முகுந்த்துபேயுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி தனது அரசின் நிலைப்பாட்டை வெளியிட்டார்.(ஸ்ரீ

## கோட்டையில்...

அரசு ஆயுதங்களை கொண்டு வருவதை தடுக்கு முகமாக செஞ்சிலுவைச் சங்கத்தினர் அவர்களை பொறுப்பேற்று தரைமார்க்கமாகப் பலாலிக்கு எடுத்துச் செல்ல நாம் இணங்கினோம்.

ஆனால் இதுவரை ஸ்ரீலங்காஅரசு இதற்குஇணங்கவில்லை சிங்கள அரசுக்கு தமது படையினர் மீது உள்ள அக்கறை எவ்வளவு என்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

கோட்டையில் காயமடைந்த படையினரை அகற்ற நாம் மறுக்கிறோம் என்றும் தமிழ் பேசும் மக்களை தாம் கொன்று குவிக்கவில்லை எனவும் அகதிகாளாகிய தமிழ் மக்களுக்கு தாம் நிவாரணம் வழங்குவதாகவும் பொய் கூறிவரும் ஸ்ரீலங்கா அரசு கோட்டையில் இருந்து காயமடைந்த படையினர் சிலரை வெற்றிகரமாக மீட்டுள்ளதாக மேலும் பொய் கூறியுள்ளது.

கோட்டையின் முற்றுகையை உடைக்கின்றோம் என கூறிக் கொண்டு யாழ் நகரை சிங்கள அரசு குண்டு வீசி அழித்து வருகிறது. அதே நேரம் சிங்கள அரசின் இனப் படுகொலை பெருமளவு கிழக்கில் நடைபெற்று வருவதையும் சர்வதேசமும் அறியும் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர)

## வடபிராந்திய வைத்தியசாலைகள் மீள இயங்குகின்றன

அண்மைக்கால சம்பவங்களினால் மூடப்பட்டிருந்த வடபிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகள் (யாழ்.போதனா வைத்தியசாலை தவிர்ந்த) மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

ஊர்காவற்றுறை வைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை நேற்று தொடக்கம் இயங்கஆரம்பித்துள்ளன.

முல்லைத்தீவு, வவுனியா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய குழுவினர் அந்தந்த மாவட்ட வைத்தியசாலைகளுக்கு சென்றுள்ளதாகவும், முல்லைத்தீவு வைத்தியசாலை எதிர்வரும் வெள்ளிக்கிழமையும், வவுனியா வைத்தியசாலை எதிர்வருய திங்கட்கிழமையும் திறக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (3)

## திருடர் நோட்டம் இப்போது இங்கே

தற்போது நிலவும் உணவுப் பொருள் நெருக்கடியால் கூட்டுறவுச் சங்கங்கள் மீது திருடர் கைவரிசை காட்டி வருவதாக கூறப்படுகிறது,

மக்கள் அன்றாட உணவுக்கு இன்னலுறும் இவ்வேளையில் இத்தகைய திருட்டுக்கள் பல பாதிப்புகலை ஏற்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது ஸ்ரீ

## மட்டு...

சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முயற்சிகள் தொலைத் தொடர்பு வசதிகள் இன்மையால் தோல்வியடையலாம் மெனவும் தெரிவிக்கப்படுகின்றது. 03

## பலாலி...

அதிகாலை பொம்மர் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதாகவும்இதனால் பலகட்டிடங்கள் சேதமடைந் ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (03)

## எல்லையில்

பட்டிருப்பு பகுதியின், எல்லைக் கிராமங்களில் காடையர்கள் அட்டகாசம், சிலர் வெட்டிக் கொலை, பலர் காணாமல் போய் உள்ளனர், சொத்துக்கள் கொள்ளை, பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு இடங்களில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு [illegible] ச்சுவீதி [illegible] உள்ள அச்சகத்தில் 04-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,